

முதலமைச்சர் மு.க.ஸ்டாலின் அவர்களிடம் நேற்று முன்தினம் (16.6.2025) திருச்சிராப்பள்ளியில், மிளகுப்பாறை அரசு ஆதிதிராவிடர் மேல்நிலைப் பள்ளியில் பயின்ற மாணவி த.ராகினி, தேசிய சட்டப் பல்கலைக் கழகங்களுக்கான பொது நுழைவுத் தேர்வில் (CLAT) தேர்ச்சி பெற்று ஜபல்பூரில் உள்ள தர்மசாஸ்திரா தேசிய சட்ட பல்கலைக் கழகத்தில் பயில தேர்வாகிவுள்ளதையொட்டி வாழ்த்துப் பெற்றார். அப்போது, முதலமைச்சர் அவர்கள் அம்மாணவிக்கு சால்வை அணிவித்து சிறப்பித்து, தன்னுடைய பேனாவை வழங்கினார். இந்நிகழ்வின்போது, நகராட்சி நிர்வாகத் துறை அமைச்சர் கே.என்.நேரு, பள்ளிக்கல்வித் துறை அமைச்சர் அன்பில் மகேஸ் பொய்யாமொழி ஆகியோர் உடனிருந்தனர்.



துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் 16.6.2025 அன்று தேனி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில் நடைபெற்ற விழாவில் ஒரு குழந்தைக்கு காதொலி கருவியினை பொருத்தி, கலந்துரையாடினார். இந்நிகழ்வில் ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச் செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் என்.இராமகிருஷ்ணன், ஆ.மகாராஜன், கே.எஸ். சரவணக்குமார், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கூடுதல் செயலாளர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங் உள்பட அரசு அலுவலர்கள், உள்ளாட்சி அமைப்புகளின் பிரதிநிதிகள் உடனிருந்தனர்.

## தேனி மாவட்ட வளர்ச்சித் திட்டப் பணிகள் குறித்த ஆய்வுக்கூட்டம்!

# அரசுத் திட்டங்கள் முழுமையாக மக்களைச் சென்றடைவதை உறுதி செய்திடுக!

## துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அறிவுறுத்தல்!

**தேனி, ஜூன்18-**

**தேனி மாவட்ட ஊரக வளர்ச்சி முகமை அலுவலகத்தில், துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் கலந்து கொண்டு மாவட்டத்தில் நடைபெற்று வரும் அரசுத் திட்டங்கள் குறித்த, உயர்நிலை ஆய்வுக்கூட்டத்தில் ஆலோசனைகள் வழங்கினார்.**

**அப்போது அவர் 'முதல்வரின் முகவரி' - 'உங்கள் தொகுதியில் முதலமைச்சர்' - 'மக்களைத் தேடி மருத்துவம்' போன்ற முன்னெடுப்புகள் மூலம் எடுக்கப்பட்ட நடவடிக்கைகளை விரிவாகக் கேட்டறிந்தார்.**

மேலும், முதலமைச்சரின் காலை உணவுத்திட்டம் - மகளிர் சுய உதவிக் குழுக்களுக்கான வங்கிக்கடன் இணைப்பு - முதல்வர் மருந்தகம் - கலைஞர் கனவு இல்லம் - கலைஞர் ஸ்போர்ட்ஸ் கிட் வழங்கும் திட்டம் - முதலமைச்சரின் விரிவான மருத்துவக் காப்பீட்டுத் திட்டம் போன்றவை மற்றும் கழக அரசின் முத்திரைத் திட்டங்கள் ஆகியவற்றின் நிலை தொடர்பாக புள்ளிவிவரங்களைக் கேட்டறிந்து ஆய்வு செய்தார்.

அப்போது, அவர் 12-ஆம் வகுப்பு பொதுத் தேர்வில் தேனி மாவட்ட மாணவர்களின் தேர்ச்சி சதவிகிதம் போன்றவற்றைக் கேட்டறிந்ததுடன், மாணவர்கள் உயர்கல்வி சேருவதை உறுதி செய்யவும் நான் முதல்வன் உள்ளிட்ட திட்டங்கள் மூலம் நடவடிக்கை எடுக்கவும் வலியுறுத்தினார். ஆய்வுகளின் வழியே அரசுத்திட்டங்கள் முழுமையாக மக்களைச் சென்றடைவதை உறுதி செய்யும்படியும் அவர் கேட்டுக்கொண்டார்.

இதனைத் தொடர்ந்து துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் ஆற்றிய உரையின் விவரம் வருமாறு:

நம் முதலமைச்சர் தலைமையிலான இந்த அரசு பொறுப்பேற்று 4 ஆண்டுகள் முடிவடைந்து, 5-வது ஆண்டில் அடி எடுத்து வைத்திருக்கின்றோம். கொண்டிருக்கிறது. கடந்த 4 ஆண்டுகளில் முதலமைச்சர் கொண்டு வந்த மக்கள் நலத் திட்டங்கள் அனைத்தையும், மக்கள் பிரநிதிகளுடன் இணைந்து செயல்படுத்தி வருகின்ற அனைத்து அரசு அலுவலர்களுக்கும், மக்கள் பிரதிநிதிகளுக்கும் எனது வாழ்த்துகளையும், பாராட்டுகளையும், நன்றியையும் தெரிவித்துக் கொள்கிறேன்.



### உறுதிமொழி

நம் முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்றபோது அவர் சொன்ன வாக்கியம். ``எங்களுக்கு வாக்களிக்காதவர்களும் எங்களின் செயல்பாடுகளைப் பார்த்து, எங்களுக்கு வாக்களிக்காமல் தவறிவிட்டோமே என்று வருந்தும் அளவிற்கு எங்களின் திட்டங்கள் இருக்கும். அப்படித்தான் செயல்படுவோம்" என்று உறுதிமொழி அளித்து இருந்தார். அதை மனதில் வைத்துக்கொண்டுதான் முதலமைச்சர் அவர்கள் பல்வேறு திட்டங்களைத் தீட்டி வருகிறார்.

குறிப்பாக, பெண்கள் பயன்பெறுகின்ற வகையில், சுதந்திரம் பெறுகின்ற வகையில் விடியல் பயணம், கலைஞர் மகளிர் உரிமைத்தொகை திட்டம், புதுமைப்பெண் என்று பல்வேறு திட்டங்களைச் செயல்படுத்தி வருகிறார்கள். கல்விக்கு முக்கியத்துவம் அளிக்கின்ற வகையில், முதலமைச்சரின் காலை உணவு திட்டம், தமிழ்ப்புதல்வன் திட்டம், நான் முதல்வன் திட்டம் என இப்படிப் பல்வேறு முற்போக்கான திட்டங்களையும் செயல்படுத்தி வருகிறோம்.

### கனவு இல்லம் திட்டம்

தற்போது தமிழ்நாடு முழுவதும் முழுவீச்சில் வீட்டுமனை பட்டாக்களையும் வழங்கி வருகிறோம். கலைஞர் கனவு இல்லம் திட்டத்தில் ஒரு லட்சம் வீடுகளை அறிவித்து, படிப்படியாக வீடுகளை அந்தப் பயனாளிகளிடம் அளித்து வருகிறோம். இப்படி பெண்கள், மாணவ, மாணவிகள், ஏழை, எளியோர், ஒடுக்கப்பட்ட பட்டியல் பிரிவு என அனைத்து தரப்பினரும் பயன்பெறுகிற வகையில் நம் அரசு இந்த 4 ஆண்டுகளாகச் செயல்பட்டு வருகிறது. அடுத்த ஒரு ஆண்டும் அந்த நோக்குடன்தான் செயல்பட இருக்கிறோம். இதுபோன்ற சமயங்களில் தான் மக்கள் தங்களின் கோரிக்கைகளை நம்மிடம் மனுக்களாக அளித்து, நம்பிக்கை வைத்து காத்து இருக்கிறார்கள். மனுக்களின் மீது உரிய பதில்களை, உரிய நேரத்திற்குள் வழங்க வேண்டியது நம் அனைவரின் கடமை.

அப்படி மனுக்கள் மீது தீர்வு வழங்காமல் இழுத்தடிப்பது, இந்த அரசின் மீது மக்கள் அதிருப்தி அடைவதற்கான வாய்ப்புகள் அதிகம். 'மனுக்களை வெறும் தாள்களாகப் பார்க்காமல், அவற்றை மனுதாரரின் வாழ்க்கையாகப் பாருங்கள்' என்று முதலமைச்சர் அவர்கள் அடிக்கடி கூறுவார். அதை மனதில் வைத்து மனுக்களை எல்லாம் நீங்கள் அணுக வேண்டும் என்று கேட்டுக் கொள்கிறேன்.

நகர்ப்புறங்களில் பட்டா கேட்டு நீண்ட நாட்களாக காத்திருப்பவர்களை மனதில் வைத்து, நம் மாண்புமிகு முதலமைச்சர் அவர்கள் புதிய அரசாணையை சமீபத்தில் வெளியிட்டார்கள். அதன் அடிப்படையில் அதிகம் எத்தனை பேருக்கு பட்டா வழங்க முடியுமோ, உடனடியாக அத்தனை பேருக்கும் பட்டா வழங்கும்படி கேட்டுக்கொள்கிறேன்.

### புதிய கோரிக்கைகள்

அதேபோல், உங்கள் தொகுதியில் முதலமைச்சர் என்ற திட்டத்தின் கீழ் சட்டமன்ற உறுப்பினர்கள் தந்த கோரிக்கைகளில் சாத்தியமில்லாத பணிகளுக்குப் பதிலாக, வேறு புதிய கோரிக்கைகளை வழங்குமாறு, முதலமைச்சர் அவர்கள் சட்டமன்றத்தில் அறிவித்து இருந்தார்.

மாவட்ட ஆட்சியர் அவர்கள் சட்டமன்ற உறுப்பினருடன் கலந்து ஆலோசித்து, மாற்று பணிகளுக்கான கோரிக்கைகளை வழங்குமாறு நான் மீண்டும் கேட்டுகொள்கிறேன். இன்னும் 10 மாதங்களில் சட்டமன்றத் தேர்தலை எதிர்கொள்ள இருக்கிறோம். நம் அரசின் திட்டங்களைச் செயல்படுத்துவதுடன், மக்களின் அடிப்படைத் தேவைகளான சாலை வசதி, குடிநீர், மின்சார வசதி, மின் விநியோகம் போன்றவற்றை எல்லாம் எந்தவித தொய்வும் இன்றி செயல்படுவதை நீங்கள் மீண்டும் உறுதி செய்ய வேண்டும் என்றுக் கேட்டுக்கொள்கிறேன்.

ஒவ்வொரு பணிக்கும் ஒரு காலக் கெடுவைக் கொடுத்து இருக்கிறீர்கள். கொடுத்திருக்கின்ற காலக்கெடுக்குள் அதை முடிக்குமாறு கேட்டுக்கொள்கிறேன். அதை நம் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையில் இருந்து உங்களை பின்தொடர்வார்கள். அதைபோல் இங்கு வந்திருக்கின்ற நாடாளுமன்ற உறுப்பினர்கள், சட்டமன்ற உறுப்பினர்கள் பல்வேறு கோரிக்கைகளை வைத்து இருக்கிறார்கள். கண்டிப்பாக அவற்றையெல்லாம் முதலமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் சென்று மற்றும் குறிப்பிட்ட அமைச்சரின் கவனத்திற்கு எடுத்துச் சென்று சரிசெய்து, உங்களுக்கு ஒரு தகுந்த பதிலை, விரைவில் நம் சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் மூலமாக அளிப்பதற்கு உறுதியளிக்கிறேன். எனவே, அரசுக்கும் இந்த மக்களுக்கும் இடையில் ஒரு நல்ல பாலமாக இருந்து நம் மாண்புமிகு முதலமைச்சர் தலைமையிலான நம் அரசிற்கு நல்ல பெயரை பெற்றுத்தர வேண்டும் என்று மீண்டும் உங்களை எல்லாம் கேட்டுக்கொண்டு, இந்த வாய்ப்புக்கு நன்றி கூறி விடைபெறுகிறேன்.

இவ்வாறு துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் பேசினார்.

**முதலமைச்சர் அவர்கள் பொறுப்பேற்ற போது அவர் சொன்ன வாக்கியம். "எங்களுக்கு வாக்களிக்காதவர்களும் எங்களின் செயல்பாடுகளைப் பார்த்து, எங்களுக்கு வாக்களிக்காமல் தவறிவிட்டோமே என்று வருந்தும் அளவிற்கு எங்களின் திட்டங்கள் இருக்கும். அப்படித்தான் செயல்படுவோம்" என்று உறுதிமொழி அளித்து இருந்தார்.**

### பங்கேற்றவர்கள்

அமைச்சர் இ.பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச்செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் கம்பம் இராமகிருஷ்ணன், மகாராஜன், சரவணகுமார், சிறப்புத் திட்டச் செயலாக்கத் துறையின் அரசு கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ் ஐ.ஏ.எஸ்., துணைச் செயலாளர் சஜீவனா ஐ.ஏ.எஸ்., மாவட்ட ஆட்சித் தலைவர் ரஞ்சித் சிங் ஐ.ஏ.எஸ்., மாவட்டக் காவல் கண்காணிப்பாளர் சிவபிரசாத் ஐ.பி.எஸ்., மாவட்ட வருவாய் அலுவலர் மகாலட்சுமி, சார் ஆட்சியர் ரஜத் பீடன் ஐ.ஏ.எஸ். உள்பட அரசு அதிகாரிகள் அலுவலர்கள் பலரும் கலந்து கொண்டனர்.

## தேனி மாவட்டம் வீரபாண்டி – அண்ணாசாலை

# அங்கன்வாடி மையத்தில் - துணை முதல்வர் உதயநிதி ஸ்டாலின் ஆய்வு!

## குழந்தைகள் – கர்ப்பிணித் தாய்மார்கள் – அங்கன்வாடிப் பணியாளர்களுடன் கலந்துரையாடினார்!

**தேனி, ஜூன் 18 –**

**துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் தேனி மாவட்டம் – வீரபாண்டி அண்ணாசாலை அங்கன்வாடி மையத்தில் குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், கிராம சுகாதாரச் செவிலியர்கள் மற்றும் அங்கன்வாடிப் பணியாளர்களுடன் கலந்துரையாடினார்**

துணை முதலமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்கள் நேற்று முன்தினம் (16.6.2025) தேனி மாவட்டம் வீரபாண்டி அண்ணா சாலை அங்கன்வாடி மையத்தில் குழந்தைகள், கர்ப்பிணித் தாய்மார்கள், கிராம சுகாதார செவிலியர்கள் மற்றும் அங்கன்வாடி பணியாளர்களுடன் கலந்துரையாடினார்.

தேனி மாவட்டம், தேனி ஊரகம் வீரபாண்டி அண்ணாசாலை அங்கன்வாடி மையத்திற்கு சென்ற தமிழ்நாடு துணை முதலமைச்சர் திரு. உதயநிதி ஸ்டாலின் அவர்கள் அங்கன்வாடியில் கர்ப்பிணித் தாய்மார்கள், பாலூட்டும் தாய்மார்கள், அங்கன்வாடி குழந்தைகள் ஆகியோரிடம் கலந்துரையாடினார். கர்ப்பிணித் தாய்மார்களுக்கு சத்துமாவு சரியாக வழங்கப்படுகின்றதா என்றும், அங்கன்வாடி குழந்தைகளுக்கு சீருடைகள் வழங்கப்பட்டுள்ளதா?, மதிய உணவு சரியாக வழங்கப்படுகின்றதா என்றும் கேட்டறிந்தார்.

குழந்தைகளின் உடல்நலம் குறித்து மருத்துவ குழுவினர் பரிசோதனை மேற்கொள்கின்றனரா, குழந்தைகளுக்கு பிறவி குறைபாடுகள் ஏதேனும் கண்டறியப்பட்டுள்ளதா என்றும் அங்கன்வாடி பணியாளரிடம் கேட்டறிந்தார்.

குழந்தைகளின் எடை, உயரம் தொடர்ந்து கண்காணிக்கப்பட்டு வருகின்றதா? என்றும் அவர்களுக்கு அளிக்கப்பட்டு வரும் முன்பருவக் கல்வி குறித்து கேட்டறிந்து, ஆய்வு மேற்கொண்டார். அங்கன்வாடி குழந்தைகளுக்கு அளிக்கப்பட்டு வரும் ஆடல், பாடலுடன் கூடிய முன்பருவக் கல்வி குறித்து குழந்தைகளுடன் கலந்துரையாடி, அவர்கள் தமிழ் மற்றும் ஆங்கிலத்தில் பாடல்களை ஆடிக்கொண்டே பாடுதைக் கேட்டு மகிழ்ச்சியடைந்து பாராட்டினார்.

கர்ப்பிணித் தாய்மார்களுக்கு கர்ப்பகால மருத்துவ பரிசோதனைகள் மேற்கொள்ளப்படுவது குறித்து தாய் சேய் நல அட்டையில் முறையாக பதிவு செய்யப்பட்டுள்ளதா என்றும் ஆய்வு செய்தார். மேலும் அங்கன்வாடியில் சத்துமாவு, உணவுப் பொருட்கள் ஆகியவற்றின் இருப்பு குறித்து பதிவேடுகளை பார்வையிட்டும், குழந்தைகள் கழிப்பறை நன்றாக பராமரிக்கப்பட்டு வருகின்றதா என்றும் ஆய்வு மேற்கொண்டார்.

இந்நிகழ்வில், தமிழ்நாடு துணை முதலமைச்சர் அவர்கள் பொதுமக்களிடமிருந்து பெற்ற கோரிக்கை மனுக்களுக்குத் தீர்வாக முதலமைச்சரின் விரிவான காப்பீட்டுத் திட்ட அட்டைகளை 5 நபர்களுக்கும், மாற்றுத்திறனாளிகள் நலத்துறையின் சார்பில் 2 நபர்களுக்கு சக்கர நாற்காலிகளையும், 2 நபர்களுக்கு தசை பயிற்சி செய்வதற்கான உபகரணங்களையும் (Standing Frame), வருவாய்த்துறையின் சார்பில் 1 நபருக்கு நலத்திட்ட உதவியும் என மொத்தம் 10 நபர்களுக்கு நலத்திட்ட உதவிகளை வழங்கினார்.

இந்நிகழ்ச்சியில், ஊரக வளர்ச்சித் துறை அமைச்சர் இ.பெரியசாமி, நாடாளுமன்ற உறுப்பினர் தங்க தமிழ்ச் செல்வன், சட்டமன்ற உறுப்பினர்கள் என்.இராமகிருஷ்ணன், திரு.ஆ.மகாராஜன், கே.எஸ்.சரவணக்குமார், சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை கூடுதல் தலைமைச் செயலாளர் பிரதீப் யாதவ், கூடுதல் செயலாளர் திருமதி ஆர்.வி.ஷஜீவனா, மாவட்ட ஆட்சித்தலைவர் ரஞ்ஜீத்சிங், உள்பட பல்வேறு துறை அலுவலர்கள் கலந்து கொண்டனர்.